# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுன் மாத அவசரக்கூட்டம் 21.06.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் யாஸ் புயலின் காரணமாக 25.05.2021 அன்று கனமழை பெய்தததால், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில், பொதுப்பணித்துறையின் பராமரிப்பின் கீழ் உள்ள குடியிருப்புகளுக்குள் புகுந்து விட்டதால், கொட்டில்பாடு, மரமடி, ஏசுதாஸ் காலனி ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்கள் மற்றும் பங்கு தந்தை ஆகியோர் நகராட்சியை முற்றுகையிட்டு மழை நீர் குடியிருப்புகளுக்குள் வராதவாறு ஏ.வி.எம் கால்வாயில் உள்ள அடைப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி பகுதிகளில் நேராய்வு மேற்கொள்ளப்பட்டதில், வெட்டுமடை பகுதியில் புதிய பாலம் அமைப்பதற்கு, பொதுப்பணி துறையால், ஏ.வி.எம் கால்வாயின் குறுக்கே தண்ணீர் போக்குவரத்தை தடுப்பதற்காக, இரண்டு இடங்களில் மண் நிரப்பப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. மேற்படி மண்ணை அகற்றினால் தான் குடியிருப்புகளில் தண்ணீர் புகுவதை தடுக்க முடியும் என்பதால், பொது மக்கள் நலன் கருதி, போர்கால அடிப்படையில் JCB மற்றும் Poclain இயந்திரங்கள் மூலம், ஏ.வி.எம் கால்வாயில் காணப்பட்ட அடைப்புகளை அகற்றும் பணியினை நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ், நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொண்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி பணிக்கான செலவினம் ரூ.31,867/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.580-1/2021/இ1

**தீர்மானம் எண்.2531 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான 2 எண்ணம் பணியாளர்களை நாள் ஒன்றுக்கு ரூ.615/- வீதம் தினக்கூலி அடிப்படையில் ஜுலை 2021 முதல் ஜுன் 2022 வரையிலான ஓர் ஆண்டிற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.4,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2521, நாள் 15.05.2021-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு, 15.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் (ரூ.4,48,950/-) |
| 2. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.33% அதிகம் (ரூ.4,50,410/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.579/2021/இ1

**தீர்மானம் எண்.2532 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/UGSS-2/2018-20 நாள் 15.11.2018-ன் படி, கசடு கழிவு நீர் மேலாண்மை திட்டம் 2018-19-ன் கீழ், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில் 40 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு, நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி திட்டப்பணிக்கு, நகராட்சி நிர்வாக முதன்மை பொறியாளரின் செயல்முறை ந.க.எண்.26888/2018/DO1 நாள் 06.12.2018-ன் படி, தொழில் நுட்ப அனுமதி பெற்று, 11.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், திரு.டி.ஜஸ்டின் சுந்தர் சிங் ஒப்பந்ததாரர் அளித்த மதிப்பீட்டை விட 1% குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு, கடந்த 08.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 08.12.2019-ல் 6 மாதங்களில் பணி முடிக்கப்படும் என ஒப்பந்தம் போடப்பட்டது.. மேற்படி திட்டப்பணிகளில் சுற்றுச்சுவர் கட்டும் பணி நடைபெற்று வந்த போது, திட்டப்பணி மிகவும் மந்தமாக நடைபெற்று வந்ததால் ஒப்பந்த காலத்திற்குள் முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, மீதமுள்ள பணிகளை உடனடியாக தொடங்கி, அடுத்தடுத்த பணிகளை மேற்கொண்டு, கட்டுமான பணிகளை ஒப்பந்த காலத்திற்குள் முழுமையாக முடிப்பது தொடர்பாக இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.566-1/2018/இ1 நாள் 27.06.2019 மற்றும் 22.08.2019 ஆகியவை ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி திட்டப்பணிகளில் ஒன்றான உப்பளம் பகுதி நிலத்தில் மண் நிரப்புதல் பணிக்கு தேவையான மண்ணை தனியார் நிலத்தில் இருந்து எடுப்பதற்கு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியினை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெறுவதில் கால தாமதம் ஏற்பட்டதால், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் ஒப்பந்ததாரரால் தொடரப்பட்ட வழக்கு எண். WP(MD)No.22058-2019-ன் மீதான தீர்ப்பில், மண் எடுப்பதற்கு ஒரு வார காலத்தில் ஒப்பந்ததாரர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்கவும், பெறப்பட்ட விண்ணப்பத்தின் மீது இரண்டு வார காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அறிவுறுத்தப்பட்டது. அதன் பின்னரும் திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளாமல் ஒப்பந்ததாரர் கால தாமதம் செய்து வந்ததால், திட்டப்பணிகளில் தொய்வு ஏற்பட்டதை தொடர்ந்து, பணியினை துரிதமாக மேற்கொள்ள கேட்டு 20.09.2019-ல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரர் எந்தவித நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்து வந்ததால், ஒப்பந்த விதிகளின் படி, திட்டப்பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்தும், கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும் 22.10.2019-ல் ஒப்பந்ததாரருக்கு இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது-

இந்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரக 06.01.2020 ஆம் தேதிய கசடு கழிவு சுத்திகரிப்பு நிலைய அமைத்தல் பணி தொடர்பான ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில், இந்நகராட்சியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு மாற்று இடம் தேர்வு செய்ய தெரிவிக்கப்பட்டதால், மேற்படி திட்டத்தில் குளச்சல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட 9 பேரூராட்சிகளில் மாற்று இடம் கண்டறிய கேட்டு 26.02.2020-ல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி 9 பேரூராட்சிகளிலும் தகுதியான மாற்று இடம் இல்லை என பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடிதம் ந.க.எண்.1975/2020/பி1 நாள் 28.11.2020-ன் மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இவ்வலுவலக இறுதி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகளை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒப்பந்ததாரரால் தொடரப்பட்ட வழக்கு WP(MD)No.24101/2019-ன் மீதான 12.03.2020 ஆம் தேதிய தீர்ப்பில், ஒப்பந்ததாரர் மண் எடுப்பதற்கு அனுமதி கோரிய விண்ணப்பத்தின் மீது கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்ததாரர் திட்டப்பணியினை தொடரவும், எதிர்மனுதாரர்கள் (நகராட்சி நிர்வாகம்) ஒப்பந்தப்பணியினை முடிப்பதற்கான ஒப்பந்த

காலத்தினை மறு நிர்ணயம் செய்து வழங்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், ஒப்பந்ததாரரை திட்டப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. ,

கன்னியாகுமரி மாவட்ட உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில், ஒப்பந்ததாரருக்கு குவாரி அனுமதி வழங்க இயலாது. சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் அருகிலுள்ள குவாரியிலிருந்து மண்ணை எடுக்க வேண்டும். திட்டப்பணியினை உடனடியாக மேற்கொள்ள ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாத பட்சத்தில் பணியினை ரத்து செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இதனால் திங்கள் நகர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கழிவு மண்ணை கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான பணிகளுக்கு எடுத்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.218/2020/புமுசு நாள் 28.12.2020-ன் படி, 240 Units அளவு கழிவு மண் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் படி, மேற்படி பகுதியிலிருந்து கழிவு மண் எடுக்கப்பட்டு நிரப்புதல் பணி மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து, பணியினை துரிதமாக மேற்கொள்வதற்கு 28.12.2020-ல் ஒப்பந்ததாரருக்கு கடிதமும் அனுப்பப்பட்டது. மேலும் ஏற்கனவே மண் நிரப்பி, Pile Foundation அமைத்து 10 KLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணியினை 3 நாட்களுக்குள் தொடங்கி, திட்டப்பணி முன்னேற்றம் தொடர்பான திட்டச்செயலாக்க அறிக்கையினை சமர்ப்பிக்க கேட்டு 09.01.2021 மற்றும் 27.01.2021-ல் ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இருப்பினும், ஒப்பந்ததாரர் திட்டப்பணியினை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளாமலும், திட்டச்செயலாக்க அறிக்கையினை அலுவலகத்தில் சமர்ப்பிக்க தவறியதாலும் 05.03.2021-ல் இரண்டாவது முறையாக இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் 26.03.2021 மற்றும் 30.03.2021 ஆகிய தேதிகளில் திட்டச்செயலாக்க அறிக்கையினை சமர்ப்பிக்காததற்கு விளக்கம் அளிக்க கேட்டு ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரரிடமிருந்து மேற்படி பொருள் தொடர்பாக எவ்வித பதிலறிக்கையும் பெறப்படவில்லை. இதனால் திட்டப்பணிகளில் மிக மோசமாக தொய்வு ஏற்பட்டு, ஒப்பந்ததாரரின் பொறுப்பற்ற செயல்களால் நகராட்சிக்கு நிதி இழப்பு மற்றும் உயர் அதிகாரிகள் மத்தியில் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

மேற்காணும் திட்டப்பணிகளை பொறுப்பற்ற முறையில், ஒப்பந்த விதிகளுக்கு அப்பாற்பட்டு, தன்னிச்சையாகவும், அலட்சியமாகவும் மேற்கொண்டு, நகராட்சிக்கு நிதியிழப்பு மற்றும் அவப்பெயர் ஏற்படுவதற்கு காரணமான திரு.டி.ஜஸ்டின் சுந்தர் சிங் ஒப்பந்ததாரரை, திட்டப்பணிகளில் ஏற்பட்ட சகல இழப்பிற்கும் பொறுப்பாக்கி, ஒப்பந்த விதிகளின் படி நடவடிக்கை மேற்கொண்டு, திட்டப்பணிக்கு அன்னாருக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை பொறியியல் கையேடு Clause 59- ன் படி ரத்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-1/2018/இ1

**தீர்மானம் எண்.2533 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி பகுதியில் அமைந்துள்ள ஏசுதாஸ் காலனி சத்துணவுக்கூடம் வாக்களிக்கும் மையத்தில், 06.04.2021 அன்று நடைபெற்ற சட்டமன்ற பொது தேர்தலின் போது முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்கு வசதியாக சாய்வு தளம் மற்றும் பழுதான கதவுகளை சரி செய்து, வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை தேர்தல் பணிகளின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதி பிரிவு 15-ன் கீழ், நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஜாண்றோஸ் மூலம் மேற்கொண்டுள்ளதற்கும் அதற்கான செலவினம் ரூ.73,931/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.335/2021/இ1

**தீர்மானம் எண்.2534 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜுன் மாத சாதாரணக்கூட்டம் 30.06.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு (கண்காணிப்பு வாகனம்) TN 75 K 6526-.ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.45,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2490 நாள் 25.02.2021-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு தமிழக சட்டமன்ற பொது தேர்தல் 2021 மாதிரி நடத்தை விதிகள் தளர்வு செய்யப்பட்ட பின்பு, 22.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Mathava Motors, Vellamadam | மதிப்பீட்டை விட 0.35% அதிகம் (ரூ.37,680/-) |
| 2. | M/s.Akshaya Motors, Unnamalaikadai | மதிப்பீட்டு விகிதம் (ரூ.37,550/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Akshaya Motors, Unnamalaikadai நிறுவனம் அளிததுள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்குவது தொடர்பாக மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057-1/2021/இ1

**தீர்மானம் எண்.2535 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி 2019-20 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கைகள் (வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி) கணிணியில் தயார் செய்து பிரிண்டு எடுத்து பைண்டிங் செய்த வகையில் ரூ.19512/- வழங்குவதற்கு அருமனை இன்ஸ்டியூட்டில் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை வழங்குவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.962/2012/எச்1

**தீர்மானம் எண்.2536 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.3,9,13,14,18,22,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிகவளாக கடை எண்கள் 33 முதல் 40,47 முதல் 52, 57 முதல் 64 கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 மற்றும் நவீன மீன்சந்தை தரைதளம் 3,4,7 முதல் தளம் 1,7 ஆகிய கடைகளுக்கு 29.06.2021 அன்று பொது ஏலம் நடைபெற்றது. பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு,

**காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.3**

| வ. எண் | ஏலத்தாரர் பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1/-க்கு) ஜி.எஸ்.டி தவிர | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | முகம்மது அப்துல்காதர் | 8000/- | 8000/- (முகம்மது அப்துல்காதர்) |

**காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.9**

| | | | |
|---|---|---|---|
| 1. | P.ஆஷிகா | 15500/- | |
| 2. | ஜாண்சன் ப. கென்னடி | 12000/- | |
| 3. | T.பேன்சி | 16000/- | 16000/- (T.பேன்சி) |

கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேற்படி கடை எண்.3-க்கு பொது ஏலத்தில் ஒரே ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார். கடைக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக கலம் (4)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியும்.

கடை எண்.9-க்கு பொது ஏலத்தில் மூன்று நபர்கள் கலந்து கொண்டனர். கடைக்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக கலம் (4)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியும் மன்றத்தின் பார்வைக்கும், ஏலம் போகாத கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2537 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

இந்நகராட்சி 2019-20 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.95390/- அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.942/2012/எச்1

**தீர்மானம் எண்.2538 அனுமதிக்கப்படுகிறது**